தமிழ் இருக்கை
TAMIL CHAIR
Tamil Chair Inc.

**Tamil Chair Inc. – Board**

Dr. விஜய் ஜானகிராமன்
Dr. Vijay Janakiraman
kvjanakiraman@gmail.com

Dr. சுந்தரேசன் சம்பந்தம்
Dr. Sundaresan Sambandam
sambandam10@gmail.com

திருமதி. வைதேகி ஹெர்பெர்ட்
Mrs. Vaidehi Herbert
kavini100@gmail.com

திரு. பால் பாண்டியன்
Mr. Paul Pandian
ppandian@transglobaltech.com

திரு. அப்பாதுரை முத்துலிங்கம்
Mr. Appadurai Muttulingam
amuttu@gmail.com

முனைவர் சொர்ணம் சங்கர்
Dr. Sornam Sankar
sornam@gmail.com

திரு. குமார் குமரப்பன்
Mr. Kumar Kumarappan
kkumar11@gmail.com

முனைவர் ஆறுமுகம் முருகையா
Dr. Arumugam Murukiah
arumugam13@gmail.com

Dr. வ. இரகுராமன்
Dr. Varadarajan Raghuraman
v_raghuraman@hotmail.com

திரு. சிவன் இளங்கோ
Mr. Sivan Ilangko
sivanilangko@yahoo.ca

# ஹார்வர்டு தமிழிருக்கைக்கு எதிரான வதந்திகள் பொய்யானவை

தமிழ் இருக்கைக் குழு பற்றியும், ஹார்வர்டு பல்கலைக்கழகம் பற்றியும் ஊடகங்களிலும் தமிழ் தொடர்புடைய ஆங்கில இணையதளங்களிலும் சில வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. வதந்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது அவற்றுக்கு சிறிதேனும் உண்மைத்தன்மை கிடைக்கச் செய்யும் என்பதால் அவற்றை ஹார்வர்டு பல்கலைக்கழகமும் தமிழ் இருக்கைக் குழுவும் கண்டுகொள்ளவே போவதில்லை. ஆனால் நன்கொடையாளர்கள் நடுவேயும் தொடர்ந்து வதந்திகளையொட்டிய கேள்விகளை எழுப்பப் படுவதால் அவர்களுக்காக தமிழ் இருக்கைக் குழு இந்த ஒருமுறை மட்டும் சிறுவிளக்கத்தைத் தர கடமைப்பட்டுள்ளது.

முதலில், வதந்திகளைத் திட்டமிட்டு உருவாக்குபவர்கள் தனிப்பட்ட உள்நோக்கங்களுக்காகவோ அல்லது நீண்டநாளைய அரசியல் காரணங்களுக்காகவோ இதைச்செய்கிறார்கள். அவர்களுடைய தனிப்பட்ட கடந்தகாலச் செயல்களின் நம்பகத்தன்மையையும், நீண்டகால அரசியல் பின்னணியையும் இணையத்தில் கூர்ந்து தேடினாலே அறிந்து கொள்ளலாம். அதன் மூலம் அவர்கள் ஏன் பொய்களை உண்மைகளாகக் கற்பிக்க முயல்கிறார்களென்று புரிந்தும் கொள்ளலாம். அரசியல் காரணங்களுக்காகச் செய்பவர்கள் முன்பு கலிபோர்னியா பெர்க்கிலி பல்கலைக் கழகத்தில் இருக்கும் தமிழ் இருக்கை பற்றியும் பரப்பிய இதுபோன்ற பொய்கள் சான்றுகளில்லாமையால் அறிவுலகத்தால் நிராகரிக்கப் பட்டுள்ளன.

அடுத்து, ஹார்வர்டு பல்கலைக் கழகம் பற்றி பரப்பப்படும் பொய்கள் பற்றிப் பார்ப்போம். 1. தமிழரை ஏமாற்றிப் பெரிய அளவில் நன்கொடை பெற்று தம்முடைய வணிகத்துக்குப் பயன்படுத்துகிறது, 2. தமிழர் வரலாற்றையும், இந்திய வரலாற்றையும் மேற்கத்தியப் பார்வையில் திரித்து வெளியிடும் நோக்கில் தமிழ்த் துறையை உருவாக்குகிறது. 3. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சீன அரசு சீன மொழிக்கான இருக்கையை தன் முழுக்கட்டுப்பாட்டில் இருக்குமாறு உருவாக்கியது, ஆனால் தமிழர்கள் ஏமாற்றப்படுவார்கள்.

ஹார்வர்டு பல்கலைக் கழகம் உலகின் பல்கலைக் கழகங்களில் தரவரிசைப் பட்டியலில் கடந்த ஏழாண்டுகளாகத் தொடர்ச்சியாக முதலிடத்தில் இருக்கிறது (2007 ஆம் ஆண்டு அனைத்துலக ஊடகங்களிலும் வெளியான சான்று இங்கே: https://www.wsj.com/articles/academics-rank-harvard-no-1-in-reputation-1497456035). இது அமெரிக்காவில் அல்லது மேற்கு நாடுகளில் மட்டுமே எடுக்கப் பட்ட கணிப்பு அல்ல. 137 நாடுகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 10500 ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு.

Tamil Chair, Inc. | 4113 Tiber Falls Drive | Ellicott City, MD 21043 | Tel. 443.854.0181 | Tax ID: 47-5021758
www.harvardtamilchair.org | https://www.facebook.com/HarvardTamilChair/ | tamilchair@gmail.com
யாதும் ஊரே யாவரும் கேளிர் | All land is home. All men, kith and kin.

இப்படிப் பட்ட முதலிடத்தை அடைய வேண்டுமெனில் ஒரு பல்கலைக் கழகத்திற்கென்று சில அடிப்படைப் பண்புகளும், கட்டமைப்பும் தேவை. வெளியிலிருந்து கொடுக்கப் படும் எந்தவித அரசியல் அழுத்தங்களும் இல்லாமை, ஆசிரியர், மாணவர் சேர்க்கைகளில் கடைப் பிடிக்கப்படும் நேர்மை மற்றும் சார்பின்மை, ஆசிரியர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் திறமை அடிப்படையில் தொடர்ந்து எடைபோடும் தரக்கட்டுப்பாடுகள், மேற்கொள்ளப் படும் ஆராய்ச்சிகள் உலகின் சக ஆராய்ச்சியாளர்களால் ஏற்கப்படும் உயர்வு என முக்கியமான சிலவற்றைக் குறிப்பிடலாம். எனவே, ஹார்வர்டு பொய்யாக வரலாற்றைத் திரிக்கிறது என்பதை விட தமிழர் வரலாற்றையும், இந்திய வரலாற்றையும் அரசியல் நோக்கத்துடன் சில போலி ஆராய்ச்சியாளர்கள் திரிப்பதைச் சான்றுகளுடன் ஹார்வர்டு பல்கலைக் கழகம் எதிர்கொள்கிறது என்பதே உண்மை. (மேலும், அரசியல் நோக்கத்துடன் ஹார்வர்டு பல்கலைக் கழகத்திலும், பிற பல்கலைக் கழகங்களிலும் இருக்கைகளை உருவாக்குவதை அடையாளங்கண்டு எதிர்த்து வருகிறார்கள் நேர்மையான ஆராய்ச்சியாளர்கள்).

எந்த வதந்திகளையும் சட்டை செய்யாமல் ஹார்வர்டு தன்னுடைய தரத்தை முதலிடத்தில் தொடர்ந்து நிறுத்தி வருகிறது என்ற ஒன்றே போதும் இவை போன்ற வதந்திகள் நிராகரிக்கப் படவேண்டியவை என்பதற்கு. பெரும் ஊடகங்களில் சிலரால் அதிரடியாக முன் வைக்கப்படும் பொய்யான குற்றச்சாட்டுகளைச் சட்டரீதியிலும் ஹார்வர்டு எதிர்கொள்கிறது.

அடுத்து, சீன மொழிக்கான இருக்கையை சீன அரசு உருவாக்கியது என்பது முழுப்பொய். அது சீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது அதைவிட பெரிய பொய். ஹார்வர்டு பல்கலைக்கழகம் மட்டுமல்ல அமெரிக்காவின் எந்தப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயல்பாடுகளையும் அமெரிக்க அரசாங்கமே கூட கட்டுப்படுத்த முடியாது. பல்கலைக் கழகங்கள் பலவும் தம்முடைய சுதந்திரமான இயக்கத்துக்குத் தடையாக இருக்கும் அரசின் கொள்கைகளை வெளிப்படையாக எதிர்க்கும் சுதந்திரம் உண்டு. எடுத்துக்காட்டாக அண்மையில் டோனால்டு டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசின் குடிபெயர்ச்சிக் கொள்கையை எதிர்த்து ஹார்வர்டு பல்கலைக்கழகம் அதிகாரபூர்வமான அறிக்கைகளை வெளியிட்டன என்பதைக் குறிப்பிடலாம். (http://hls.harvard.edu/content/uploads/2017/06/Offensive-and-Unconstitutional-Legal-and-Political-Strategies-for-Defeating-President-Trump%E2%80%99s-Muslim-Immigration-Ban-by-Nathan-MacKenzie.pdf)

மூன்றாவதாக, தமிழ் இருக்கைக் குழுவைப் பற்றிய வதந்திகளைப் பார்ப்போம். 1. ஹார்வர்டு பல்கலைக்கழகம் தமிழ்த் துறை உருவாக்க தம் பணத்தைச் செலவழிக்காமல் தமிழர்களிடம் ஏமாற்றி நிதிதிரட்டுவதற்காக தமிழ் இருக்கைக் குழுவை உருவாக்கியுள்ளது. 2. மருத்துவர்கள் தம் பிள்ளைகளையோ, குடும்பத்தினரையோ ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் சேர்க்க நன்கொடை அளித்து நிதி திரட்டுகிறார்கள்.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தம் பெயரிலும், குடும்பங்களின் பெயர்களிலும் இருக்கைகளை ஏற்படுத்தப் பெரும் செல்வந்தர்களும், அறக்கட்டளைகளும் முழுத் தொகையுடன் தயாராக காத்திருக்கிறார்கள். நிலைமை இப்படியிருக்க, தமிழர்களிடம் நன்கொடை திரட்டி ஹார்வர்டு

தம்முடைய நோக்கத்தைச் செயல்படுத்த எந்த முகாந்திரமுமில்லை. தமிழ் இருக்கைக் குழுதான் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தை அணுகி தமிழுக்கு இருக்கை வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது. மேலும், அரை மில்லியன் நன்கொடை கொடுத்தெல்லாம் ஹார்வர்டில் பிள்ளைகளுக்கு இடம் வாங்க முடியாது. மருத்துவர்கள் இருவர் குடும்பங்களிலும் யாரும் அந்தச் சூழ்நிலையிலுமில்லை. தமிழர்தம் வரலாற்றிலேயே முழுநேரம் கடினமாக உழைத்து ஊதியமாக ஈட்டிய பொருளிலிருந்து இவ்வளவு பெரிய நன்கொடையைத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக யாரும் அளித்ததில்லை. அவர்களுடைய உயர்ந்த நோக்கத்தைச் சிறுமைப் படுத்த இதைவிட வேறு பொய்யில்லை.

இறுதியாக, 1. தமிழர்களின் தொன்மையான ஓலைச் சுவடிகளையும், பிற சான்றுகளையும் திருடித் தம்மிடம் வைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது ஹார்வர்டு. 2. தமிழ் நாட்டிலும், இந்தியாவிலுமுள்ள தொன்மையான ஓலைச்சுவடிகளையும், பிற சான்றுகளையும் தமிழ் இருக்கைக் குழு ஹார்வர்டு பல்கலைக் கழகத்திற்குத் தாரை வார்க்கப் போகிறது.

இது போன்ற குற்றச்சாட்டுகள் இன்றைய நவீனத் தொழில் நுட்ப உலகில் பொய்களாகப் பரப்பக்கூட தகுதியில்லாத சிறுபிள்ளைத்தனமானவை. பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் போது இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்களும், சிற்றரசுகளும் தமக்குள் சண்டையிட்டு இந்தியா என்ற ஒரு நாடே முழுமையாக ஏற்படாமல் இருந்த பொழுது கிழக்கிந்திய வணிக நிறுவனம் இந்தியாவிலிருந்து பல்வகையான தொல்பொருட்களைக் கொள்ளை கொண்டு போனது பழைய வரலாறு. ஆனால் இப்பொழுது இந்தியா, அமெரிக்கா உட்பட உலகின் பெரும்பாலான நாடுகளில் மக்களாட்சி நிலவுகிறது. வெளிப்படைத் தன்மையுடனும், ஊடக வெளிச்சங்களுடனும் இயங்கும் மக்களாட்சிகளில் இதுபோன்ற திருட்டுகளை எந்த நிறுவனமும் நாடும் செய்ய இயலாது.

தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் இருக்கும் ஓலைச்சுவடிகளுக்கோ, அல்லது வேறு சான்றுகளுக்கோ தமிழ் இருக்கை குழுவுக்கும், ஹார்வர்டு பல்கலைக் கழகத்துக்கும் எந்தவிதமான தொடர்புகளும், ஒப்பந்தங்களும் இல்லை. தமிழ் இருக்கை அமைப்பது தொடர்பாக ஏற்படுத்தப்படும் உடன்படிக்கைகள் அனைத்தும் எங்களது இணையதளத்தில் வெளியிடப்படும். ஏற்கனவே இதுபோன்ற ஆரம்பகட்ட ஆவணங்களை இணையதளத்தில் வெளிப்படையாக வைத்துள்ளோம்.

தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் பொருள் மதிப்பில்லை என்ற ஒரே காரணத்தினால் கேட்பாரற்று விடப்பட்டுள்ள எத்தனையோ சான்றுகளையும், நூல்களையும் அவற்றை தம்செலவில் இந்தியாவிலேயே ஆவணப்படுத்தி காப்பதற்கு உதவியுள்ளன பல மேற்கத்தியப் பல்கலைக் கழகங்கள். எடுத்துகாட்டாக, 1994ல் சென்னையில் அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகம் ஏற்படுத்த உதவிய ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தைச் சொல்லலாம் (https://www.lib.uchicago.edu/e/su/southasia/about-rmrl.html). 'ரோஜா' முத்தையா என்ற தனிமனிதர் தம்மிடம் சேர்த்து வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான நூல்களும், ஆவணங்களும், 1992 ஆம் ஆண்டு அவர் இறந்தபோது வீணடிக்கப்படும் சூழலை அறிந்து அவற்றைப் பெற்று சென்னையிலேயே ஒரு நூலகத்தை ஏற்படுத்தியது சிகாகோ பல்கலைக் கழகம். மேலும் அவற்றை எண்ணிமப்படுத்தி (digitize) உலக அளவில் ஆராய்ச்சியாளர்கள் தகவல்களைப் பயன்படுத்திக் கொள்ள உதவியிருக்கிறது.

எனவே ஓலைச்சுவடிகளை மேற்கத்திய பல்கலைக் கழகங்கள் திருடிக்கொண்டு போகும் என்பதைப் போன்ற வதந்திகள் எந்த அடிப்படையுமில்லாதவை மட்டுமல்ல, தொன்மையான தமிழ் வரலாற்றுச் சான்றுகள் யாருக்கும் பயன்படாமல் மேலும் வீணடிக்கப் படுவதற்கு அடிப்படையாக இருக்கப்போகின்றன.

மேற்கண்ட வாதங்களின் அடிப்படையில் தமிழ் இருக்கைக் குழு எம்முடைய நன்கொடையாளர்களையும் ஆதரவாளர்களையும் நாங்கள் வேண்டிக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். உங்களுடைய தமிழ்ப்பற்றையும் உணர்வையும் மிகநன்கு புரிந்து கொண்ட நாங்கள் அவற்றுக்கு உண்மையாக இருப்பது மட்டுமல்லாமல், நமக்கெதிராக பரப்பப்படும் கருத்துகளையும் கூட அவற்றின் மெய்ப்பொருள் அறிந்து எம்முடைய தொடர்ந்த செயல்பாடுகளில் கவனமாகக் கையாளுவோம் என்று உறுதியளிக்கிறோம். நீங்களும் வீண்வதந்திகளை அப்படியே நம்பிவிடாமல் அவற்றிற்கான சான்றுகள் ஏதேனும் இருக்கின்றனவா என்று சீர்தூக்கி பார்த்து அவற்றின் பின்னாலான காரணங்களையும் ஆராய்ந்து அவற்றை எதிர்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

நன்றியுடன்,
செயற்குழு
தமிழ் இருக்கை அமைப்பு.
மார்ச் 11, 2018